


11வது ஞானாச்சாரியார்

# 12வது ஞானாச்சாரியார்

## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்

## அவர்களின் எழுத்துக்கள்





12வது ஞானாச்சாரியார்

**தை மாத வெளியீடு**

**பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த மெய்யான இந்துமத ஆண்டு 43,73,113**

**உள்ளுறைத் தலைப்புக்கள்**

# சித்தர் இராமாயணம் தமிழினத்தாரின் வரலாறே!

- ■ **தமிழர்களின் முன்னோர் மூதாதையர்களின் வரலாறே இராமாயணமும் பாரதமும் என்பதை விளக்கும் கட்டுரை.**
- ■ **தமிழர்கள் தங்களின் மூதாதையர்களின் வரலாறுகளை அன்னியர்களுக்கு தாரை வார்த்தது எப்போது? எப்படி? - என்பதை விளக்கும் கட்டுரை.**
- ■ **சித்தர் இராமாயணத்தின் அறிமுகவுரையும் முகவுரையும் - சித்தர் காகபுசுண்டர் எழுதியது.**
- ■ **குருபாரம்பரியம் தரும் யக்ஞவல்லியர் வரலாறு - சித்தர் காகபுசுண்டர் எழுதியது.**
- ■ **இராமண், இரதவண்ணன், விசும்பத்திறர் - பெயர்களின் விளக்கங்கள்.**

# தமிழர் மதமே இந்துமதம்

- ☐ **இந்துமதத்தின் ஆறு சமயங்கள்**
- ☐ **இந்துமதத்தின் ஆறு சமயங்களும் ஆறு பதினெட்டுக்களும்.**
- ☐ **இந்துமதத்தின் ஆறு சமயங்களும் பன்னிரண்டு இராசிகளும்**
- ☐ **இராசி பயன் (இராசி பலன்)**

www.gurudevar.org
Email: indhuism@gmail.com
Cell: 9972130609

**தமிழ்மொழிப் பற்றும், தமிழர் நெறியான இந்துமதப் பற்றும் உள்ளவர்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கை. இதை நகலெடுத்துத் தமிழ் தெரிந்த அனைவருக்கும் படிக்கக் கொடுக்கவும்.**

# சித்தர் இராமாயணம் (தமிழின வரலாறு)

## (முன்னுரை)

இன்றைக்கு சித்தர் இராமாயணம் என்ற தலைப்பில் "ஆய்வுக் கட்டுரைகள்" எழுத நேரிட்டுள்ள அவசிய அவசரத் தேவை நிலைகளைச் சுருக்கமாக குறிக்கிறோம் யாம்.

யாம் முழுமையாக மீண்டும் இராமாயணக் கதையை எழுத முன்வரவில்லை. இன்றைக்கு நாட்டு நடப்பில் வால்மீகி, போதாயனர், துளசிதாசர், நாரதர், கம்பர், புலவர் குழந்தை... முதலியோர் எழுதிய இராமாயணங்களே பெரும்பாலும் படிக்கப்பட்டும் பேசப்பட்டும் வருகின்றன. ஆனால், இவைகளுக்கெல்லாம் ஆரம்பமாக, மூலமாக, முதலாக, முதலாவதாக, துவக்கமாக, கருவாக, தாயாக, பதினெண் சித்தர்களின் 'இராமாயணம்', 'இராமகாதை', 'இராவணகாதை', 'மண்டோதரி வாக்கு(சாபம்)', 'ஞான வாசிட்டம்' அல்லது 'வசிட்டர் காதை', 'இராவணன் நீதி', 'சீதை நீதி', 'விசுவாமித்திரர் நீதி', 'சனகர் அறம்', 'தசரதன் அறம்', 'இராவணன் அறம்', 'வால்மீகி ஞானம்', 'விசுவாமித்திரர் ஞானம்', 'வசிட்டர் ஞானம்', 'சனகர் ஞானம்', 'இராவணன் ஞானம்', 'சீதை ஞானம்', 'மண்டோதரி புலம்பல்', 'இராமன் புலம்பல்', 'சீதை புலம்பல்'.... என்று பெயரிடப்பட்டுக் குறிக்கப்படும் அறுபது நூல்கள் இருக்கின்றன. இவற்றின் அடிப்படையில்தான் பிற்காலத்தே பலரும் இராமாயணத்தைக் கதைகளாக, கவிதைகளாக, காவியங்களாக எழுதினர்.

***கி.பி. 8ஆம் நூற்றாண்டில் 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்கள் எழுதிய குருபாரம்பரியத்திலிருந்து...***

"....ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனின் தவறுகளாலும், வட ஆரியர்களின் சூழ்ச்சிகளாலும், இமயமலைப் பிராகிருத மொழிக் களப்பிறராலும், கங்கைக்கரைப் பாலிமொழிக் கலப்பிறர்களாலும்... எதிர்பாராத வண்ணம் தமிழ்மொழிப் புலவர்களும், தமிழ்ச்சுவடிகளும், தமிழ்ச்சங்கம் வளர்த்த மாளிகைகளும், மாடகூடங்களும், மன்றங்களும்.... மதுரை மாநகரும் பேரழிவுக்குள்ளாகி எண்ணூறு ஆண்டுகளாகப் போகின்றன. இன்னும் நம் தமிழர்களுக்கு அதிர்ச்சி, அச்சம், ஒற்றுமையின்மை, அன்னியரிடம் அடிமைகளாதல், மொழிப்பற்றின்மை, இனப்பற்றின்மை, நாட்டுப் பற்றின்மை... முதலிய நலிந்த பண்புகள் இருந்து கொண்டுதானிருக்கின்றன. அப் பேரழிவுக் காலத்திலேயே வாழ்ந்து அவற்றின் வீச்சுக்களையும், ஓச்சுக்களையும், தாக்குதல்களையும், ஆட்சிகளையும், ஆளுமைகளையும்... தடுக்க, அகற்ற நூற்றைம்பது ஆண்டுகளுக்கும் மேலாக முயன்ற பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூறாரின் அரிய பெரிய சீரிய கூரிய நேரிய... முயற்சிகள் அனைத்தும் பெரிய தோல்வியையே பெற்று விட்டன. இது ஒரு மாபெரும் சாபக்கேடு. இனித் தமிழினத்தை உய்விப்பது எப்படி? எவ்வாறு? எவையெவற்றின் வழியாக?.... என்ற வினாக்களுக்கு விடை கிடைக்காமலேயே போகுமோ!....

"இன்றைய நிலையில் வட ஆரியரின் சூழ்ச்சியால் வேத நெறி எனும் வலைக்குள் அகப்பட்ட மீனாகவும், சமசுக்கிருதம் என்னும் கூண்டுக்குள் அடைபட்ட கிளியாகவும், நாட்டைப் பிரித்தும் துண்டாடியும் போட்டி பொறாமைச் சண்டைகளால் அமைதியற்ற நிலையில் வைத்தும்... தமிழர் அல்லாதார், அனைவரையுமே சுரண்டியும், ஏமாற்றியும், கொள்ளையடித்தும் வாழுகிறார்கள். இவர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்றுவது இயலவே இயலாது. ஏனெனில், இவர்கள் தமிழர்களிலேயே தன்னல வெறியர்கள், புகழ் வெறியர்கள், பொருள் வெறியர்கள், பதவி வெறியர்கள், தன்மானப் பிடிப்பற்றோர், தன்னம்பிக்கை இல்லாதோர், கூலிமனத்தார், அடிமை யுணர்வுடையார், கங்காணிச் சித்தமுடையோர்... என்ற அனைத்து வகையான துரோகிகளையும்

தேர்ந்தெடுத்துத் தங்களுடைய கையாட்களாக்கிக் கொண்டு விட்டார்கள். மேலும், இவர்கள், வட ஆரிய வேதநெறி வெறிமிக்க இந்து மதத்தை வலிமையான ஆயுதமாகப் பயன்படுத்தித் தமிழர்களுக்கிடையில் ஒற்றுமையுணர்வோ, மொழிப்பற்றுணர்வோ, இனப்பற்றுணர்வோ, நாட்டுப் பற்றுணர்வோ, துரோகிகளைப் பற்றிய எச்சரிக்கையுணர்வோ, விரோதிகளைப் பற்றிய விழிப்புணர்வோ... முளைவிடாமல் செய்திடுகிறார்கள். எனவே, இதற்கு ஒரே வழி பதினெண் சித்தர்களின் இராம காதையையும், கண்ணன் காதையையும் உடனடியாகச் சுவைமிக்க பேரிலக்கியங்களாகப் பல்வேறு வண்ணங்களில் (வண்ணம் = வகை : தாலாட்டு, அம்மானை, கழங்கு, ஊசல்வரி, வள்ளைப்பாட்டு, தெம்மாங்கு, ஒப்பாரி, இசைப்பாடல், நாட்டியப்பாடல், கூத்துப்பாடல், நாடகப் பாடல், காப்பியம்.... எனப் பலவகைப்படும்) வடித்தெடுப்பதுதான்......

"சந்திர குலத்தாரின் பாரதக் காதை கண்ணன் காதை வடிவப்பட்டிட எடுத்த முயற்சிகள் தோற்றன. இனி இராமகாதை வடிவப்பட எடுக்கும் முயற்சிகளால்தான் தமிழின வாழ்வு விழிச்சி, எழுச்சி, செழுச்சி, மலர்ச்சி, உயர்ச்சி.... பெற்றிட முடியும்."

## கால நிலை விளக்கம்:

கிரேதா யுகத்தில் (17,28,080 ஆண்டுகள்) சிவ புராணங்கள், முருக புராணங்கள், சத்தி புராணங்கள், மாபுராணங்கள்... என்று பலவும் நிகழ்ந்தன. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர் நிகழ்ந்தது.

திரேதா யுகத்தில்(12,90,000 ஆண்டுகள்) இராமாயணம் நிகழ்ந்தது. சூரியகுலத்தார் காகபுசுண்டர்கள் [காக்கையர்கள்] ஆட்சி ஓங்கியது. மானுடர்-அரக்கர் போர்க் காலம்.

துவாபர யுகத்தில் (8,64,000ஆண்டுகள்) தோற்றத்தார்கள்(அவதாரம்) பதிலிகள், அரக்கர் வாரிசுகள், தேவ வாரிசுகள், மாயாசத்தியாளர்கள்... முதலியோருக்கும் மானுடருக்கும் போர் நிகழ்ந்தது. இது சந்திர குலத்தாரின் ஆட்சி. பதினெண் சித்தர்களில் குருபீடமேற்ற கருவூரர் வாரிசுகள் 'குருகுலத்தார்' ஆட்சிக்காலம்.

இந்த மூன்று யுகங்களும் கடந்து, கலியுகம் பிறந்து 2000 ஆண்டுகள் கழித்தே வடஆரியர் இந்தியாவுக்கு வந்தனர். கலியுகத்தில்தான் வடஆரியர் (பால்வண்ணம், பழுப்பு மேனியர்) இந்தியா வந்தனர். கலி பிறந்து மூவாயிரமாண்டு கழித்தே, 'தெய்வத் தமிழுக்கே' தீங்கு செய்யச் சமசுக்கிருதம் பிறப்பிக்கப்பட்டது.

## இராமாயணம் பற்றிய நூல்கள்

அ. 1. இராவணனாற்றி (இராமன் பாடியது)
2. மண்டோதரி மகனாற்றி
3. மண்டோதரி கணவனாற்றி
4. பரதன் தந்தையாற்றி

ஆ. 1. இராவணன் தாலாட்டு
2. மேகநாதன் தாலாட்டு
3. கும்பகர்ணன் சிந்து (காவடிச் சிந்து)

இ. 1. இலவகுச இராமகாதைப் பாட்டு
2. இராமகாதைத் தாலாட்டு
3. இராமகாதை ஊசல்வரி
4. இராமகாதை அம்மானைவரி
5. இராமகாதை கானல்வரி (இராமகாதை கடல் தெம்மாங்கு என்ற தலைப்பு வேறுபாடு உண்டு.)
6. இராமகாதை உலக்கைவரி
7. இராமகாதை கும்மிப்பாட்டு
8. இராமகாதை கழங்குவரி
9. இராமகாதை களிப்பாட்டு [வேலைப் பாட்டு - வேலை செய்யும்போது பாடும் பாடல்]
10. இராமகாதை ஒப்பாரி
11. இராமகாதைப் பரணி.......

என்று இவ்வாறு எண்ணற்ற நூல்கள் இருக்கின்றன. பெரும்பாலான பெயர்கள் எம் நினைவில் இல்லை. இதுபற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ள எமக்கு இளமையில் போதிய வசதி வாய்ப்புகள் கிடைக்கவில்லை. யாம் ஆராய்ச்சியாளராக (U.G.C. Research Scholar) இருந்த போது தமிழுலக ஆசிரியப் பெருமக்களின் ஆதரவோ ஆர்வத்

துணையோ கிடைக்கவே இல்லை.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் (சித்தர்களால்) உருவாக்கப்பட்ட சமசுக்கிருத மொழியில் மூன்றாவது சங்கப் புலவனான புறநானூற்றுப் பாடல் பாடிய வால்மீகி நல்ல புலமை பெற்று இராமாயணத்தைச் சுருக்கமாக ஒரு சிறிய காப்பியமாகப் பாடினான். ஆனால் பெயர் ஒற்றுமை கருதி இந்த வால்மீகியே இராமாயணக் காலத்து வால்மீகி என்ற கருத்துக் குழப்பம் தோன்றி முதன்முதல் இராமாயணம் சமசுக்கிருத மொழியில்தான் பாடப்பட்டது என்ற கற்பனாவாதம் ஏற்பட்டு விட்டது. **ஏறத்தாழ இருபத்தொன்றரை இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த இராமனையே சமசுக்கிருத மொழிக்கும், வடஆரியப் பண்புக்கும் உரியவனாக்கி விட்டார்கள். இப்படி மாபெரும் உகப்புரட்டுகளைச் செய்துதான் வடஆரியர்கள் தங்களின் வேதப்பண்பாடுகளையும், நாகரிகங்களையும், கொள்கைகளையும், நம்பிக்கைகளையும், தமிழர்களுடைய அனைத்துத் தத்துவங்களிலும், பண்பாடுகளிலும் புகுத்தி மாபெரும் குழப்பத்தையும், சிக்கலையும் உருவாக்கி விட்டனர்**. இவற்றைச் சித்தர்களின் இலக்கியங்களால்தான் சரி செய்ய முடியும்.

மண்ணுக்கும் விண்ணுக்கும் இணைப்பாக உள்ள சத்திகள், பேருண்மைகள், மிகப்பெரிய விளக்கச் செயல் நிலைகள்.... என்ற பேருண்மைகளைத் தமிழர்கள் மறந்தால் இம்மண்ணுலக அருளுலகும் பொருளுலகும் இருண்டு போகும். இவர்களை பதினெண்சித்தர் பீடாதிபதி தோன்றி உறக்கத்திலிருந்தும், கிறக்கத்திலிருந்தும் எழுப்பும் வரை இவர்களுக்கு கதை வடிவிலாவது தமிழ்ப் பண்பாட்டுணர்வு, நாகரிக உணர்வு,... முதலியவைகள் நிலைத்து நிற்குமாறு திட்டமிட்டார் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி.

வெந்தச் சோறு, மூவகை இலிங்கங்களுக்கும் (இலிங்கம், சிவலிங்கம், சத்தி லிங்கம்) படைத்துண்டு, பின்னர் வெள்ளாடு பலியிட்டுச் சத்தி புராணங்களும், சிவ புராணங்களும்; தேனும், தினை மாவும் முருகனுக்குப் படைத்துண்டு செம்மறியாடு பலியிட்டு முருகு புராணங்களும்; பழம், தேங்காய் பல்வகைத் தேவர்களுக்குப் படையலிட்டுண்டு, பறவைகள் பலியிட்டு மாபுராணங்களும்.... பாடப்பட்ட பாரம்பரியத்தில் கம்பரும், பெருந்தேவனாரும் தோன்றி முறைப்படி இராமதேவரின் கதையையும்; கண்ணதேவர் கதையையும் பாடிடச் செய்தார் பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி.

இதன்படி கம்பர்கள், பரம்பரை வழக்கப்படி (*கம்பர் என்பது குலப்பெயர்; பாடுவது அவர்களது தொழில்*) கம்பந்தாள் குடிசையிலும், பந்தலிலும் வாழ்ந்து; கம்பந்தாள் பாயில் துயின்று; கம்பஞ்சோறும் கலவையிறைச்சியும் (பறவை, விலங்கு, மீன், முட்டை, கருவாடு, முருங்கைக்காய், அகத்திக் கீரை சேர்ந்த உணவு) உண்டு சூரியக் குலப் பெருமை கூறும் செய்திகளை இராமகாதையாக வண்ணங்களில் பாடினார்கள்.

அதேபோல் பெருந்தேவனார்கள் என்பவர்கள் பரம்பரையாகச் சந்திர குலத்துக்குரிய (கருவூறார் பரம்பரை) செய்திகள், கதைகள், வரலாறுகள்.... முதலிய அனைத்தையும் (சிவன், முருகன் இவர்களைச் சார்ந்தவர்கள், இவர்களின் பாண்டிய அரசபரம்பரை, கருவூறார்கள் வரலாறு, கண்ணன் கதை, பாரதப்போர் இன்னோரன்ன பிறவும்) தினைத்தாள் குடிசையிலும், பந்தலிலும் வாழ்ந்து, தினைப் பாயில் துயின்று, தினைச்சோறும், கலவை இறைச்சியும் உண்டு சந்திரகுலச் செய்திகளைக் கண்ணன் காதையாகப் பல வண்ணங்களில் பாடினார்கள்.

இருபத்தேழு வகைப்பட்ட இலக்கியங்கள் கம்பர்களாலும், பெருந்தேவனார்களாலும் தேவைக்கேற்ப இயற்றப்படுவதும் வாசிக்கப்படுவதும் ஓதப்படுவதும், விரித்துக் கூறப்படுவதும், பாடிக் காட்டப்படுவதும், கூத்தாக ஆடிக் காட்டப்படுவதும், நாடகமாக நடித்துக் காட்டப் படுவதாகவுமாக நவநாத சித்தர்களில் புகழ்பெற்ற இராமதேவர் காதையும், கண்ண தேவர் காதையும் இந்துமதம் காக்கும் கைகளாக இருந்து வருகின்றன.

சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூறார் தமது குறிப்பில், "... வடஆரியர்களால் மதுரை மாநகர் கண்ணகி காலத்தில் முழுமையாக அழிக்கப்பட்ட போது தமிழ்ச் சங்கமும், புலவர் இருக்கைகளும்,

பட்டிமன்றங்களும், படியெடுக்கும் மாளிகைகளும், சுவடிக் காப்பகங்களும் எரியூட்டப்பட்டதாலும்; எண்ணற்ற சங்கப் புலவர்களை வெட்டிக் கொலை செய்யப்பட்டு விட்டதாலுமே கம்பர்களையும், பெருந்தேவனுர்களையும் கொண்டு இருபத்தேழு வண்ணங்களில் இராமகாதையையும், கண்ணன் காதையையும் நூல்களாக்கினேன்....” என்று காணப்படுகின்றது.

மூன்று உகங்களிலும் சிவன், முருகன், இராமன் நிகழ்த்திய போரின் அழிவுகளை விடக் கண்ணன் நிகழ்த்திய போரின் அழிவே மிகப்பெரியது. எனவே பார் = உலகம்; அதம் = அழிவு (சிறப்புக் குறிப்பு: பேரழிவு, நிகழாத அழிவு) பார் + அதம் = பாரதம் ‘இம்மண்ணுலக அழிவு’ என்னும் பொருளுடைச் சொல்லால் குறிக்கப்படும் வழக்கு பதினெண் சித்தர் பீடாதிபதிகளால் ஏற்பட்டது.

காவிரியாற்றங்கரைக் கருவூரரின் குறிப்பிலிருந்து (காலம் எட்டாம் நூற்ருண்டு), “....தமிழர்கள் இனப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, பண்பாட்டுப்பற்று, நாகரிகப்பற்று, இந்துமத நம்பிக்கை... முதலியவைகளை இழந்து சோனகர், யவணர், பாரசீகர், சீனர், வட ஆரியர்.... முதலியவர்களின் பணத்துக்கும், பதவிக்கும், புகழுக்கும் பேராசை கொண்டு அடிமைகளாக, கூலிகளாக வாழுகின்றனர். இவர்களால் சிவன், முருகன், கண்ணன், அம்மன் கோயில்களில் இருந்த பெருந்தேவனுர்களும்; தேவர்கள், இராமன், அனுமன், திருமால், பெருமால், இராமேச்சுரங்கள்... முதலிய கோயில்களிலிருந்த கம்பர்களும் செல்வாக்கிழந்து செயலிழந்தனர். பதினெண் சித்தர் பீடாதிபதிகள் வகுத்த குருபாணி முறைப்படி குருமார்கள் ஓதுதலும், குருக்கள்கள் வாசித்தலும் வழக்கொழிந்தன. அருளோடு கோயில் நிருவாகங்களை நிகழ்த்துதல் மங்கித் தேங்கி மறையலாயின.

“எனவேதான், அரும்பெரும் முயற்சிகளால் பாரதக் காதைக்குரிய இருபத்தேழு வண்ண நூல்களும் தொகுக்கப்பட்டு மானுமதுரைக் கோயிலிலிருந்த பெருந்தேவனுரிடம் கொடுக்கப்பட்டுப் பாரதம் மீண்டும் எழுதிட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனுல் பாண்டியன் தவருல் அனைத்தும் அழிந்தன. இராமகாதைக்குரிய இருபத்தேழு வண்ண நூல்களும் தொகுக்கப்பட்டுத் தேரெழுந்தூர் கம்பரிடம் கொடுக்கப்பட்டன. ‘கவிச்சக்கரவர்த்தி’ மகனைக் கொன்ற ஒட்டக் கூத்தர்கள் [***கூத்தர் = தமிழினத்தைச் சேர்ந்த கூத்தாடும் கலைஞர்கள்; ஒட்டக்கூத்தர் = ஒண்ட வந்த அதாவது இந்தியாவுக்குள் ஒட்டி வாழ (ஒண்டி வாழ) வந்த வட ஆரியக் கூத்தாடும் கலைஞர்கள், அதாவது பிரமணர் (பிற மண்ணினர்)***] கம்பர் வாழ்ந்த கம்பங்காட்டையும், கம்பந்தாள் வேய்ந்த தவக்குடிலையும், குடிலைச் சுற்றி வாழ்ந்த குருகுல இளம் கவிஞர்களையும், குருகுலத்தில் காக்கப்பட்ட இருபத்தேழுவண்ண நூல்களையும் கொளுத்தினுர்கள். அவர் எழுதிய 48000 பாடல்களில் 37000 பாடல்களை அழித்து விட்டனர்.

“விசயாலயனின் தவருல் கவிச்சக்கரவர்த்தி பாடிய உத்தர காண்டம், இராமகாதை நீதிக் காண்டம் என்ற இரண்டு பெரும்பகுதிகளும் வடஆரியரால் அழித்தொழிக்கப் பட்டன. வட ஆரியரில் அரசுச் செல்வாக்குப் பெற்றிருந்த ஒட்டக் கூத்தர்கள் கவிச் சக்கரவர்த்தி கம்பரை நாட்டரசங் கோட்டையில் கொலை செய்து புதைத்தார்கள். நார்த்தாமலைக் கோயிலுக்கு வந்த இச்செய்திகளின் உச்சக்கட்டமாக கரிகாலன் காட்டு மன்னுர்குடியில் வட ஆரியரால் கொலை செய்யப்பட்டான்.

“அம்பிகாபதிக்கு முரட்டாற்றங்கரை வெட்டுப் பாறையில் (மிரட்டாற்றங்கரை என்றும் பாட வேறுபாடு உள்ளது) சமாதும், அமராவதிக்கு அவர் தீக்குளித்து மாண்ட உறையூர் வெற்றிவேல் தடக்கைக் காளி முன்னரும், கவிச் சக்கரவர்த்திக்கு கொலைசெய்து புதைக்கப்பட்ட நாட்டரசங் கோட்டையிலும் சமாது கட்டிய பிறகே மிஞ்சியிருந்த கம்பராமாயணப் பாடல்களையும்; நந்திவர்மப் பல்லவன் குடமுழுக்குப் போரில் கொணர்ந்தளித்த திண்டுக்கல் பெருந்தேவனுர் பாடிய பாரதத்தையும் (வல்லம் படுகையில் கொண்டு வந்து தந்தான்) நாடு முழுவதும் படித்துத் தமிழுணர்வும், தமிழின ஒற்றுமையும், தமிழர் உரிமை பேணும் தன்மான உணர்வும் தழைக்க ஏற்பாடுகள் செய்தோம்.....”

என்று குறிக்கின்றார்.

வட ஆரியர்கள் தமிழினத்தை நிலையாக அடிமைப்படுத்தத் தேவையான அளவு தமிழ் மொழியின் வரலாற்றையும் வளத்தையும் அழித்து விட்டனர். இனித் தமிழர்கள் இராமாயணம் தங்களுடைய மொழிக்கும், இனத்துக்கும், நாட்டுக்கும், சமயத்துக்கும், சமுதாயத்துக்கும், அரசியலுக்கும் உயிரானது என்ற பேருண்மையை உணரவே முடியாது........ என்ற இரங்கத்தக்க நிலை உருவாகிவிட்டது.

## இராமாயணமும், மகாபாரதமும் திரிந்ததும் பிரிந்ததும் வேறானதும் மாறானதும் எப்போது? எப்படி? ஏன்? எதற்காக?

பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூறாரின் குருபாரம்பரிய, இலக்கிய பாரம்பரிய, அரச பாரம்பரிய வாசகங்களையே இவ் வினாக்களுக்குப் பதிலாக வழங்கப்படுகின்றன.

இராமன், பதினெண்சித்தர்களில் கருவூறாரின் மகளான சோழமாதேவிக்கும் [சோழியாயி] பதினெண் சித்தர்களில் ஒருவரான காக்கையர் எனப்படும் காகபுசுண்டருக்கும் பிறந்த வாரிசுகளால் தோற்றுவிக்கப்பட்ட சூரியகுல மன்னனே. இம்மன்னர்களின் சூரிய அரசகுலம் (பாண்டிய அரசகுலம், பஃறுளியாறு, வையை, வடயமுனைக் கரையில் இருந்தது. - திங்கள் குலம்) இளமுறியாக் கண்டத்தில் குமரியாற்றங்கரையிலும், காவிரியாற்றங்கரையிலும் புதிதாகத் தோன்றிய வட இமயப் பகுதியில் உள்ள வடகங்கைக் கரையிலும் (தென் இமயமலை, இளமுறியாக் கண்டத்தில் இருந்தது. அதில் தென் கங்கை, தென் யமுனை.... என்ற ஆறுகள் இருந்தன) ஆட்சி புரிந்தது.

இதேபோலத் ‘திங்களங்குலம்’, ‘சந்திர குலம்’ எனும் அரசகுலம் பதினெண் சித்தர்களில் ஒருவரான சித்தர் கருவூறாருக்கும் குமரிக்கும் பிறந்த வாரிசுகளின் வழியாகவே தோன்றிற்று. இக்குலத்தார் குருகுலத்தார் என்று சிறப்பிக்கப் படுகின்றனர். ஏனெனில், பதினெண் சித்தர் பீடத்தைத் தோற்றுவித்தவருமான சிவனுக்கும் இளமுறியாக் கண்டத்து மலை நாட்டு மங்கைக்கும் பிறந்த முருகனுக்குத் தெய்வானை என்ற விண்வெளிப் பெண்ணும், வள்ளி என்ற மண்ணுலகப் பெண்ணும் மனைவியராகி முப்பத்திரண்டாண்டு அகவை முடிந்தும் வாரிசு இல்லாததால், அவன் பதினெட்டுப் படைவீடுகளில் நிறைந்தான். (சித்தர்களுக்கு 6 படைவீடு + தேவர்களுக்கு 6 படைவீடு + மானுடர்க்கு 6 படை வீடு = 18 படை வீடுகள்). அதன் பிறகு, விண்ணவர்க்கும், மண்ணவர்க்கும் உறவு நீடிக்கும் உரிமையை நிலைநாட்ட பதினெண் சித்தர்களில் ஒருவரான கருவூறாரே இம்மண்ணுலகப் பெண்ணான குமரியை மணந்து சோழமாதேவி, குமரன் எனும் இரண்டு வாரிசுகளைத் தோற்றுவித்துக் குருகுலம் காத்தார். சித்தர் கருவூறார் மகள் சோழமாதேவிக்கும் (சோழியாயி) சித்தர் காகபுசுண்டருக்கும் (காக்கையர்) தோன்றிய சூரிய குல மன்னர்களே கங்கைக் கரையிலும் காவிரிக் கரையிலும் ஆட்சி செய்தனர்.

இவர்களின் பரம்பரையில் வந்தவனான இராமாயணத்தின் தலைவன் இராமதேவன் நவநாத சித்தர்களுள் ஒருவன். இவன் இரண்டாவது உகமான திரேதாயுகத்தில் வாழ்ந்தவன். இவனது உகம் 12,90,000 ஆண்டுகள். இவனுக்குப் பிறகு பாரதப் பெருங்கதையின் தலைவன் கண்ணதேவன் நவநாத சித்தர்களின் வகையிலேயே தோன்றினான். இவனது உகமான துவாபர யுகம் 8,64,000 ஆண்டுகள்.

தமிழர்கள் தாங்கள் வழிபட்டு அருள் பெறவேண்டிய நவநாத சித்தர்களான இராமதேவரையும், கண்ணதேவரையும் மறந்து துறந்து செயல்பட ஆரம்பித்துப் பேரிழப்புக்குள்ளாகி விட்டார்கள். இம்மண்ணுலகில் சிவனும், முருகனும், மானுடர்கள் அரிதின் முயன்று தவத்தாலும் கடிய பத்தியாலும் காணக்கூடிய பதினெண் சித்தர்களாக

உள்ளார்கள். அதே நேரத்து மக்கள் நினைத்தவுடன் அருளைப் பெற்று நன்மை பெற்றிடக் கூடிய நவநாத சித்தர்களாக இராமதேவரும், கண்ணதேவரும் இருக்கின்றனர். இராமதேவர், கண்ணதேவர் வரலாறுகளும் வாழ்ந்த இடங்களும், வாழ்க்கைத் தொடர்புடையவர் பெயர்களும்..... உச்சரித்தவுடன், ஓதியவுடன் அருளை மழையாகப் பொழியக் கூடியவை.

இதற்காகவே கம்பர்களையும், பெருந் தேவனுர்களையும் தேடிப் பிடித்து அவரவர் கல்வி, கேள்வி, அடைவு, துய்ப்பு, தவம், சுற்றம், பயணம்.... முதலியவைகளுக்கேற்பப் பழகு தமிழில் அழகான இலக்கியங்களை எழுதச் சொல்கிறேம் யாம். இந்த இருபத்தேழு வகைப்பட்ட இலக்கியங்களும் தமிழர்களிடையே இராமதேவர், கண்ண தேவர் காதையை வாசிப்பதும், ஓதுவதும், பாடுவதும், கூத்தாடுவதும், நாடகமாக்குவதும்.... தொடர்ந்து நிகழச் செய்ய வேண்டும். இராமனையும், கண்ணனையும் வட ஆரியராக எண்ணச் செய்ததின் மூலம் தமிழினத்துக்கும், இராமனுக்கும் கண்ணனுக்கும் உள்ள தொடர்பை அறுத்தெறிந்த வட ஆரியர் சூழ்ச்சி உடனடியாக முறியடிக்கப்பட்டேயாக வேண்டும், எமது முயற்சிகளை இன்னும் தமிழர்கள் புரிந்து கொள்ளவில்லை. தமிழ்ச் சங்க அழிவு, தமிழ்ச்சங்கப் புலவர்கள் கொலை, சங்க இலக்கிய எரிப்பு.... முதலியவை மூலம் ஆரியர் மாபெரும் வெற்றி பெற்றுவிட்டனர். இந்த நிலையில் எமது ‘இராமகாதை, கண்ணன் காதை மறுமலர்ச்சியடைந்தால்தான் தமிழர்களுக்கு வருங்காலமுண்டு’.... என்ற கருத்தும் கருத்தினடிப்படையிலான முயற்சியும் என்று? எப்போது? எப்படி? வெற்றி பெறுமோ? தெரியவில்லை.....

தமிழர்கள் தங்களின் முன்னோர்களையும் மூதாதையர்களையும் புரிந்தால்தான் தன்மான உணர்வு, தன்னம்பிக்கை உணர்வு, விடுதலையுணர்வு, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, இனப்பற்று, இன ஒற்றுமை.... முதலியவை முளைக்கும், கிளைக்கும், செழிக்கும், பிழைக்கும். “....இன்றைய நிலையில் விண்ணவர்களையும் அவர் வழியினரையும், வழிவந்த சிவன், முருகன், திருமால், பிறமண், தேவர்கள்.... முதலியோர் வரலாறுகளையும், வாசகங்களையும், வாக்குகளையும், மக்களிடையில் பரப்புவதைவிட இம்மண்ணுலகில் தோன்றிய, மானுடராகப் பெருமளவில் செயல்பட்ட சூரிய குல இராமதேவர் காதையையும்; திங்கள் குலக் கண்ணதேவர் காதையையும் பரப்புவதே நல்லது. இதற்காகவே உகக் கணக்கில் பாரம்பரியமாக இராம காதை கூறிவரும் கம்பர்களில் சிறந்த தேரெழுந்தூர்க் கம்பனையும், கண்ணன் காதை கூறிவரும் பெருந்தேவனுர்களில் சிறந்த மானுமதுரைப் பெருந்தேவனையும் தேர்ந்தெடுத்து இரு காப்பியங்களைப் பதினெண் சித்தர் நெறி விளக்கும் வண்ணம் பாடிடச் செய்தோம். இதனுல் வடஆரியர் மிகத் திறமையாகப் பெருந்தேவனுரையும், அவரிடமிருந்த பாரதக் காதை பற்றிய வாசகங்களையும், எம்மால் தயாரிக்கப்பட்ட குறிப்பேடுகளையும்... அவர் எழுதிய பாரதக்காதை ஏடுகளையும் நன்கு திட்டமிட்டு அழித்தொழித்தனர். இதேபோல், தேரெழுந்தூர்க் கம்பனை எளிதில் அழிக்க முடியாது என்பதை உணர்ந்த ஒட்டக் கூத்தர்கள் நன்கு திட்டமிட்டுத் தமிழ்மொழிக்கு வருங்கால வாரிசாக இருந்த கம்பரின் மகன் அம்பிகாபதியையும் தமிழக அரசியலுக்கு வருங்கால உயிராக இருந்த, உயிர் வாரிசாக இருந்த விசயாலயன் மகள் அமராவதியையும் அழித்தனர். பின்னர் கம்பரைக் கொன்று இராமகாதை பற்றிய வாசகங்களையும்; எம்மால் எழுதப்பட்ட வாக்குகள் பற்றிய குறிப்புச் சுவடிகளையும் அழித்தனர்.

இனியாவது, தமிழர்கள் ‘இராமதேவர்’, ‘கண்ணதேவர்’ என்ற பெயரை அடிக்கடி கூறுவதுடன் இவர்களுடைய வரலாறுகளையும், வாழ்வியல் தொடர்புடையவர்களையும் நினைத்து நினைத்து அருளை மழையாகப் பெற்று வாழ்வைப் பசுமையாக வைத்துக் கொள்ள வேண்டும்.”

-- சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூரின் வாசகங்கள்

முன்னுரை முற்றும்.

# சித்தர் இராமாயணம் (முகவுரையும், அறிமுகவுரையும்)

இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் பாரம்பரியத் தலைவர்களில் இரண்டாவதாகத் தோன்றியவரும், மார்க்சீயத்திற்கு செயல் வடிவம் கொடுப்பதற்காக இரசிய நாட்டில் புரட்சி மலருவதற்கு முன்னரே அறிவியல் மேதை திரு எம்.என்.இராய் அவர்களுடன் சேர்ந்து உலகக் கம்யூனிச இயக்கம் (The International Communist Party) என்ற அமைப்பை நிறுவியவரும் இந்தியத் துணைக்கண்டத்தில் பகுத்தறிவுக் குடியரசுக் கட்சி (Radical Democratic Party) என்ற அமைப்பின் மூலவர்களில் ஒருவராகவும் இருந்திட்ட காக்கா வழியன் பண்ணையாடி சித்தர் காகபுசுண்டர் ம. பழனிச்சாமி பிள்ளை அவர்கள் சித்தர் இராமாயணம் பற்றி எழுதியுள்ள முகவுரையும், அறிமுகவுரையும் என்ற கட்டுரைத் தொகுதிகளிலிருந்து ஒரு சில செய்திகளை மட்டும் சித்தர் இராமாயணம் வெளியிடுவதற்கு முன் இந்த ஏட்டில் வெளியிடுகிறோம்.

1. இந்தியத் துணைக் கண்டத்தில் அன்னியர்கள் அரசாண்டாலும் சரி, இந்தியர்களே அரசாண்டாலும் சரி, அரசியலின் மூலம் மக்களின் வறுமை, ஏற்றத்தாழ்வு, அறியாமை, அடிமையுணர்வு, வாழ்வியல் புரியாமை, மடமை..... முதலியவைகளை அகற்றிச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை அமைக்கவே முடியாது. ஏனென்றால், இது ஒரு பழம்பெரும் நாடு. எல்லோரும் பழமையிலும் கண்மூடிப் பழக்க வழக்கங்களிலும், மூட நம்பிக்கைகளிலும், காட்டுமிராண்டித்தனமான கற்பனைகளிலும், ஆரிய சூழ்ச்சியால் வீழ்த்தப்பட்டு விட்டார்கள். அதாவது, நெடுங்காலமாகி பாழடைந்து இடிந்து கிடக்கும் ஒரு கட்டிடத்தை யார் வேண்டுமானாலும் மிக எளிதில் விருப்பப் பட்ட இடத்தில் விருப்பம் போல் இடித்து, கட்டிட அமைப்புக்களில் மாற்றங்கள் செய்து கொள்ள முடியும். அதை யாரும் கண்டுபிடிக்க முடியாது. யாரும் அதைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள்.

அதைப் போலத்தான் இம்மண்ணுலகின் பூர்வீகக் குடிகளான தமிழர்கள் இமய மலையும், இன்றைய வட இந்தியாவும் தோன்றிய பிறகு அனைத்து இடங்களிலும் பரவி வாழ்ந்தார்கள். அதனால் அவர்கள் தங்களுடைய பண்பாட்டையும், நாகரீகத்தையும் கட்டுக்கோப்பாக பாதுகாக்க முடியாமல் போயிற்று. இருந்தாலும், இவற்றைக் காக்கும் மிகச் சிறந்த சாதனமாக பதினெண் சித்தர்களால் வழங்கப்பட்ட சித்தர் நெறி எனப்படும் இந்துமதம் ஒரு சமுதாய இயலாக (The Induism is a Social Science) இருந்து இந்துக்களின் நாடு என்ற பெயரில் இமயம் முதல் குமரி முனை வரையிலும் (முன்பு தென் இமயமலை வரை) பரவிக்கிடந்த நாடு இந்தியா என்று அழைக்கப்பட்டது. இந்த நாகரீகமும் பண்பாடும் சுமார் அரைக் கோடி ஆண்டுகளுக்கு மேலே பழமையுடையது. அதனால், இதனுடைய நுட்ப, திட்ப அமைப்புக்களும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளும், நெறிமுறைகளும், மரபுகளும், ஒழுகலாறுகளும் காலத்தால் பழமையாகி பழுது பட்டுவிட்டன. இவற்றை யெல்லாம் அவ்வப்போது சரி செய்வதற்காகத்தான் பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோன்றுகிறார்கள். இவர்கள் ஏற்கனவே உள்ள எழுதப்பட்ட இலக்கியங்களையும், எழுதா இலக்கியங்களையும் புதுப்பித்தும், அவற்றின் அடிப்படையில் புதிதாக எழுதியும்தான் பண்பாட்டுப் புரட்சியை (Cultural Revolution) செய்து தேவையான சமுதாய மாற்றங்களை (The Social changes) உருவாக்கி அதன் மூலமே அரசியல் சீர்திருத்தங்களையும் செய்திருக்கிறார்கள். அதாவது, முழுமையான சமுதாய மாற்றத்தின் மூலமே அரசியல் சீர்திருத்தங்களை அல்லது செம்மைகளை அல்லது புதிய வடிவங்களை உருவாக்கி யிருக்கிறார்கள்.

இவற்றை யெல்லாம் வட ஆரியர்கள் மிகத் திறமையாக எழுதப்பட்ட இலக்கியங்களில் எல்லாம் எண்ணற்ற இடைச் செருகல்களைச் செய்து அவற்றை தங்களுடையவைகளாக மாற்றிவிட்டார்கள். அதாவது வரலாறுகளையும், வரலாற்று நாயகர்களையும், நிகழ்ச்சிகளையும், தத்துவங்களையும், நூல்களையும், இடங்களையும் தங்களுடைய சமசுக்கிருத மொழி ஒலிநயத்துக்கு ஏற்பத் திருத்தி ஒரு மாபெரும் மாயையை, கலக்கத்தை, குழப்பத்தை, இருட்டடிப்பைச் செய்து விட்டார்கள். இவற்றை இரண்டு 10, 11 ஆகிய பதினெண் சித்தர் பீடாதிபதிகள் பெரிதும் முயன்றும் கூட அகற்ற முடியவில்லை. எனவே, இந்தியாவில் செய்யப்பட வேண்டியது மதச் சீர்திருத்தம். அதன் மூலம் செய்யவேண்டியது சமுதாயச் சீர்திருத்தம்தான். இதற்கு மதவழிப் புரட்சி மூலம் சமுதாயத்தின் முழுமைப் புரட்சியை விளைவிப்பதுதான்.


இதற்கு முறையாகவும், நிறையாகவும் இந்துமதப் புராணங்களும், இதிகாசங்களும், மதச் சாத்திறங்களும், பூசாவிதிகளும், முனிவர்கள், இருடிகள், ஞானிகள், தவசிகள், அந்தணர்கள், சித்தியாளர்கள்...... முதலியோர்களின் வரலாறுகளும், பதினெண் சித்தர்களின் நூல்களின்படி விளக்கப் பட்டாக வேண்டும், தெளிவாக எழுதப்பட வேண்டும். அந்த முயற்சியிலேயே இராமாயணத்தைப் பற்றிய பல ஆரிய மாயைகளை, பொய்களை, திரிபுகளை, இருட்டடிப்புக்களை வரலாற்றுப் பூர்வமாக வெல்லுவதற்காக இராமன் பிறப்பதற்கு முன்பிருந்தே தசரதனோடும், இராமனின் மாமனரான சனகரோடும் நெருங்கிப் பழகி குருபீடமாக வாழ்ந்த யக்ஞவல்லி (யக்ஞவல்கியர்) எழுதிச் சென்றுள்ள இராமாயணக் காலக் குறிப்புகளையும், அவருடைய வரலாற்றையும், அவருடைய காலத்துப் பெரிய மனிதர் பலர் பற்றிய வரலாற்றையும் இக்கட்டுரைத் தொகுதிகளில் எழுதுகிறேன். இவைதான் சித்தர் இராமாயணத்தின் முகவுரையாகவும், அறிமுகவுரையாகவும் இருந்து இராமாயணம் பற்றி பேருண்மைகளை விளக்கிடும்.

# இராமண், இரதவண்ணன்

சித்தர் இராமாயணத்தில் 'இராமண்' என்று 'ட'ண்ணகரம் 'ற'ன்னகரத்துக்குப் பதில் குறிக்கப்படுகிறது. இம்மண்ணுலகில் இரவிகுலம் நிலைத்த புகழைப் பெறுமாறு பிறந்த ஓகம், ஓகி, யோகி...... என்று இராமணின் பிறப்பியல் (சாதகம்) கணிக்கப்பட்டே இப்பெயர் வைக்கப் பட்டது.

அயோத்தி மன்னர்களிலேயே இரதம் ஓட்டுவதில் வல்லவன் 'அயரதன்' = தயரதன் என்று பெயர் பெற்றான். இவனுடைய இயற்பெயர் 'அறவோன்' என்பதேயாகும்.

இரண்டாவது உகமான திரேதாயுகத்தில் 'இரதம்' ஓட்டுவது மிகச் சிறப்புக்கும், பெருமைக்கும், போட்டிக்கும் உரியதாக கருதப்பட்டது. மன்னர்கள் இரதம் ஓட்டுவதில் பெற்ற வல்லமையைக் கொண்டே பெயர்கள் வைக்கப்பட்டன. அயோத்தி மன்னன் பத்துவகையான தேர்களை ஓட்டிடும் வல்லவன் என்பதால் 'பத்துரதன்' என்றும்; இலங்கை மன்னன் 'இலங்கேசன்', இலங்கேசுவரன் எனக் குறிக்கப்படுபவன் தன் எண்ணப்படி எந்த வகையான இரதத்தையும் ஓட்டும் கைவண்ணம் பெற்றிருந்தான் என்பதால் 'இரத + வண்ணன் = இராவணன்' எனப் பெயர் பெற்றான்.



**குவலய குருபீடம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரர்**

# குருபாரம்பரியம் தரும் யக்ஞவல்லியர் வரலாறு

## (சித்தர் காகபுசுண்டர் ம. பழனிச்சாமி பிள்ளை)

தற்போது பிறமண்ணினரான பிருமணர்களின் சமய மாத இதழ்களில் 'யாக்ஞவல்கியர்" என்று குறிப்பிட்டு இராமாயணக் காலத்தில் வாழ்ந்த தமிழ் அருளாளனைப் பற்றித் தவறான கருத்துக்கள் வெளியிட்டு வருகின்றனர். எனவே, அவரைப் பற்றிய உண்மையை அனைவரும் அறியும் பொருட்டு இதனைத் தொடர்ந்து வெளியிடுகின்றோம்.

இன்றுள்ள தமிழ் எழுத்துக்களால் என்றென்றுமுள்ள தமிழர்களுக்குப் புரியும் வண்ணம் எழுதத் துவங்கியுள்ளோம் யாம். இதனால், உருவாகும் எண்ணப் புரட்சி, கருத்துப் புரட்சி, சிந்தனைப் புரட்சி.... முதலியவைகள்தான் தமிழர்களை ஆரிய மாயைகளிலிருந்து காப்பாற்ற வேண்டும். அதாவது, ஒவ்வொரு தமிழனுக்கும் 'தான் ஒரு தமிழன்' என்பது புரிய வேண்டும் தன்னுடைய பண்பாடும், நாகரிகமும், வரலாறும் இந்துமத அடிப்படையில் விளங்கிடல் வேண்டும். அப்பொழுதுதான், அவன் ஓர் இந்துவாக உணர்வாலும் சிந்தையாலும், செயலாலும் முழுக்க முழுக்க தமிழ் மொழிப்பற்றும், தமிழினப் பற்றும், தமிழ்நாட்டுப் பற்றும் ஊற்றெடுக்கப் பெற்ற ஒரு தமிழனாக, உண்மையான இந்துவாக வாழ்ந்திடுவான்.

இப்பொழுது யாம் குறிப்பிடும் யக்ஞவல்லியின் வரலாறு பற்றிய குறிப்பு இராமாயணத்தை விட மிகமிக அவசியமாக அனைத்துத் தமிழர்களாலும் புரிந்து உணர்ந்து தெளிந்து ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

வல்லி = வல்லவன், சிறந்தவன், பேராற்றல் மிக்கவன் என்று பல பொருள்களைக் குறிக்கும். பதினெண் சித்தர்கள் சூரிய குலத்தில் 1. ஓமவல்லி, 2. ஓகவல்லி, 3. யாகவல்லி, 4. யக்ஞவல்லி, 5. வேள்வி வல்லி, 6. தவ வல்லி, 7. ஞானவல்லி, 8. மாந்தரீக வல்லி என்று எட்டு வகையான வல்லிகளை படைத்துப் பூசாவிதிகளை வகுத்துள்ளார்கள்.

சந்திர குலத்தில் 1. நேமவல்லி, 2. நியமவல்லி, 3. நிடதவல்லி, 4. நிட்டைவல்லி, 5. சுருதி வல்லி, 6. ஆரண வல்லி, 7. ஆகம வல்லி, 8. மீமாம்சை வல்லி, 9. தாந்தரீக வல்லி, 10. ஏந்தரீக வல்லி என்று பத்து வகையான வல்லிகளைப் படைத்து வழிபாட்டு நிலைய உயிர்ப்பு விதிகளை வகுத்துள்ளார்கள்.

வட ஆரியர்கள் இந்த வல்லியர்களைப் பற்றிய செய்திகள் அனைத்தையும் மறைக்கவும், திரிக்கவும், திருத்தி மாற்றி இருட்டடிப்புச் செய்யவும் மிக நுட்பமான சூழ்ச்சி திட்டக் கருத்தை யக்ஞவல்லியின் பெயரிலேயே திரிபை உண்டாக்கி சூழ்ச்சி வலை பின்னி விட்டார்கள்.

**யக்ஞவல்லி -> யாக்ஞவல்கி என்று திருத்தி அமைத்திட்டார்கள். இத்துடன் இவரை "நான்வேத வல்லார்" என்று கூற ஆரம்பித்து விட்டார்கள். ஆனால், மிகத் தெளிவாக சித்தர்களின் நூல்களில் "நான்மறை முற்றிய யக்ஞவல்லி" என்று குறிக்கின்றார்கள்.**

கங்கைக் கரையில் இருந்திட்ட நாடுகளில் குரு பாஞ்சால நாட்டைச் சேர்ந்த காட்டில் சூரிய குலத்தவர்கள் ஐந்தீ வேட்டல், முத்தீ ஓம்பல் என்பவற்றில் ஈடுபட்டு கூட்டம் கூட்டமாக முனிவர்களாக, இருடிகளாக வாழ்ந்தார்கள். இவர்களுக்கிடையில் தலைமை வாய்ந்தவராக விளங்கிய பிறம்மராக்கதர் தமது துணைவியான அணங்குடன் (அணங்கை, சுணங்கை என்று வழக்கு மாறுபாடு உண்டு) வாழ்ந்து வந்தார். இவர் தமது தவவலிமைக்கும் ஞானத்திற்கும் ஏற்ற குழந்தை பிறக்க வேண்டும் என்பதற்காக சூரியனையும், சூரிய குல காகபுசுண்டரையும் திருமாலையும் 48 மாதங்கள் தொடர்ந்து வேண்டி யோக போக முறைப்படி ஆண்மகவை பிறப்பித்தார். அந்த மகவே சூரியனார் என்று

கங்கைக் கரை வாசிகளால் சீராட்டிப் பாராட்டி வளர்க்கப் பட்டது.

**(குருதேவர் அறிக்கை 20 இலிருந்து எடுக்கப் பட்டது)**

இந்தச் சூரியனுர் இமயமலைச் சாரலிலே நெடுங்காலமாக கடுந்தவத்தில் ஈடுபட்டிருந்தார். அருளாளர்களிடம் மாணுக்கனுக இருந்து ஏட்டறிவிலும் பட்டறிவிலும் தேர்ச்சி பெற்ருர்.

இவர் சிறப்பாக இருடி வேதத்தை 'பசுக்கோவலன்' (பாஸ்கலரிஹ்) என்பவரிடமும், அதர்வான வேதத்தை அண்ட பேரண்ட அருளாளர் (அருண ரிஷி) என்பவரிடமும், சாம வேதத்தை அஞ்ஞானச் சாவுமணி (ஜெமினி ரிஷி) என்பவரிடமும், அசுரவேதத்தைத் தனது தாய்மாமனுன வைகைச் சம்போகி (சமசுக்கிருதத்தில் வைசம்பாயனர்) என்பவரிடத்திலும் கற்றுக் கொண்டார். ஆனுல், இவரது தாய் மாமன் போகப் பிரியராக இருந்ததால் அசுர வேதத்தை முழுமையாக இவருக்குக் கற்றுத் தர முடிய வில்லை. இதனை சூரியனுர் தனது அசுர வேதப் பயிற்சியால் கண்டறிந்தார். இது குறித்து இவரது மாமன் வைகைச் சம்போகியிடம் அடிக்கடிப் போராட வேண்டியிருந்தது.

இப்போராட்டம் வைகைச் சம்போகியின் நெருங்கிய நண்பனும் போக விருப்பனுமான, 'மோக விருப்பன்' தொடர்ந்து முறையற்ற போகத்தாலும், மோகத்தாலும் தொழு நோயினுல் பாதிக்கப் பட்டு வருந்திக் கொண்டிருந்தவனுக்கு மருத்துவம் பார்ப்பதில் விளைந்த கருத்து மாறுபாட்டில் மாபெரும் முறிவையும், முடிவையும் உருவாக்கிற்று. அதாவது, சூரியனுர் தன்னுடைய மாமாவான வைகைச் சம்போகியை விட அசுர வேதத்தில் வல்லவனுக இருந்ததால், அவருடைய நண்பன் மோக விருப்பனின் தொழுநோயை நலப் படுத்துமாறு கட்டளையிடப் பட்டு அதில் விளைந்த தகருரால் குருவையே மறுத்தும், வெறுத்தும், எதிர்த்தும் முறைப்படி செயல்பட்டு அவரிடம் கற்ற அசுர வேதச் சாரங்களை (பயன்களை, சத்திகளை, சித்திகளை, முத்திகளை) வாயில் போட்ட வாழைப் பழத் துண்டில் ஏற்றி அவரது காலடியில் துப்பித் திரும்பக் காணிக்கை யாக்கி விட்டு வெளியேறிவிட்டார்.

விளக்கம்: பதினெண் சித்தர்கள் நெறிப்படி யாருக்கு குருவைப் பிடிக்கவில்லையோ அவர்கள் குருவிடம் கற்றவைகளையும், நோற்றவைகளையும், உற்றவைகளையும், பெற்றவைகளையும் ஒரு வாழைப் பழத் துண்டில் மந்தரித்து ஏற்றி அதனை வாயில் போட்டு மென்று அதனை குருவின் காலடியில் துப்பித் திருப்பித் தந்து விட வேண்டும். அப்பொழுதுதான் அவன் குரு விரோதியாகவோ துரோகியாகவோ பழிபாவங்களுக்கும் சாபங்களுக்கும் உரியவனுக மாட்டான்.

**(குருதேவர் அறிக்கை 19இலிருந்து எடுக்கப்பட்டது)**

யக்ஞவல்லியர் "'குருவாக ஏற்றவர்களை மாற்றவோ தூற்றவோ கூடாது' என்ற நியதியையும் மீறி நானே குருவிடம் கற்ற பெற்ற நோற்ற உற்ற அனைத்தையும் திருப்பிக் கொடுத்து விட்டு நேரடியாக எங்கள் குல முதல்வனுன சூரியனையே வேண்டித் தவம் செய்து அசுர வேதத்தைக் கற்றுக் கொண்டேன். இதற்குப் பதினெண் சித்தர்கள் தனிமனித சித்திக்காக உருவாக்கிய காயந்திரி மந்திரம், மந்தரம், மாந்தரம், மந்திறம், மாந்தரீகம் என்னும் ஐந்தினையுமே கடுமையாகப் பல ஆண்டுக் காலம் பயன் படுத்தினேன். அதனுடைய வல்லமையினுலும் தொல்லையினுலும் தான் சூரியனே நேரில் தோன்றிப் பதினெண்சித்தர்கள் படைத்த அசுர வேதத்தை எனக்கு வழங்கியதோடு நான்கு மறைகளையும் இந்த யுகத்தில் கற்றுத் தேறும் தரமும், திறமும், உரமும், பாரம்பரியமும், விவேக வீரியமும் எனக்குத்தான் இருக்கின்றது என்று கூறி அதற்காக நான் என்னென்ன செய்ய வேண்டும் என்பனவற்றையும் விளக்கி வாழ்த்தியருளினுர். நானும் சூரிய குலம் பெருமை காக்கக் கடலோடி நாடோடி வாழ்வுகளை ஏற்று நான்மறை முற்றியவனுனேன்" என்று எழுதுகின்ருர்.

இந்தச் சூரியனார் பதினெண் சித்தர்கள் படைத்த ஐந்தீ வேட்டல் [ஓமம், ஓகம், யாகம், யக்ஞம், வேள்வி என்னும் ஐந்தும் ஐந்தீ வேட்டல் எனப்படும்], முத்தீ ஓம்பல் [கந்தழி, வள்ளி, கொடிநிலை எனும் மூன்றே முத்தீ ஓம்பல் எனப்படும்] எனும் இருபெரும் பிரிவு வழிபாட்டு முறையில் அடங்குகின்ற எட்டு முறைகளில் 'யக்ஞம்' என்ற முறையை மட்டும் தேர்ந்தெடுத்து நல்ல தேர்ச்சி பெற்றார். இதனால் 'யக்ஞ வல்லி' என அழைக்கப் பட்டார். ஆனால், இந்த 'யக்ஞவல்லி' என்ற பட்டத்துக்குரிய சித்தியை இவர் இவருடைய மாமனும் குருவுமாகிய வைகைச் சம்போகிக்காக ஒரே ஒரு முறை பயன்படுத்தித்தான் நிலையான புகழைப் பெற்றிட்டார். இச்சுவையான நிகழ்ச்சி பற்றிய முழு விவரங்களையும் இவரே தெளிவான வரலாறாக எழுதி இருக்கின்றார். அதாவது இவர் சூரிய குல பாரம்பரியம் உள்ளிட்ட பல பாரம்பரியங்களைப் பற்றி பல தொடர் நூல்களைச் சிறப்பாக எழுதியுள்ளார். இவையல்லாமல், தானே எழுதிய யக்ஞவல்லியின் கீதை என்ற நூலையும் அதே போன்று இசைப் பாடல்களாக எழுதப்பட்ட இவர் காலத்திய புகழ்மிக்க 1. பரசுராமர் கீதை, 2. எண்கோண மேனியான் கீதை, 3. வசிட்டர் கீதை...... என்று 48 வகையான கீதைகளைத் தொகுத்தார்.

## திரேதா யுகத்தின் முதன்மை யக்ஞவல்லிக்கா? இராமனுக்கா?

இராவணயுத்தத்தால் இராமன் வரலாற்றுத் தலைவனாக வளர்ச்சியுற்றான். ஆனால், திரேதா யுகத்தில் முழுமையான வரலாற்றையும் விளக்கிடும் சான்றுகளையும், ஊன்றுகளையும் தொகுத்தளித்த இலக்கியப் பேராசிரியர், வரலாற்றுப் பேராசிரியர், தத்துவ மேதை, அருளுலக வல்லவன்..... என்ற புகழுக்கெல்லாம் உரிய முதன்மை மேன்மையும், சிறப்புமுடைய திரேதாயுகத்து மனிதர் சூரியனார் எனப்படும் யக்ஞவல்லியே.

## விசும்பத்திறரே விசுவாமித்திரர்

**விசும்பு + அத்திறர் --> விசும்பாத்திறர் --> விசும்பத்திறர்**

விசும்பத்திறர் என்று கடந்த யுகம் வரையிலும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளும் குறிக்கின்றார்கள். விசும்பு வரை அத்திறம் ஓச்சுவார் இவர். அதாவது, பூமிக்கு மேலே ஐந்தாவது நிலையான விசும்பு வரை இவருடைய அத்திறம் செல்லும். அதற்கு அடுத்த பாழ்வெளி, பரவெளிகளுக்கு இவரது அத்திறம் செல்லாது. அதற்கான முயற்சிகளில் ஈடுபடாமல் விசும்பத்திறர் மண்ணுலக வாழ்க்கைக்கு வந்து விடுகின்றார். பதினெண்சித்தர் பீடாதிபதிகள் மட்டும்தான் மேலே உள்ள ஏழு உலகையும் கடந்து அத்திறங்களைச் செலுத்துவர். அதனால்தான், இவர்களை 'ஆச்சாறியார்' என்றும் மற்றவர்களை 'ஆச்சாரியார்' என்றும் அழைப்பர்.

விசும்பாத்திறர் வரலாறு தமிழர் வரலாறு என்பதால் அதை மறைக்க எண்ணியே இந்தப் பிறமண்ணினரான பிருமணர்கள்; **விசுவாமித்திரர் குதிரைக்குப் பிறந்தவர்** என்று ஆபாசமாகவும், அநாகரீகமாகவும் இழிவாகக் குறித்து விட்டனர். **விசும்பாத்திறர்** என்ற தமிழ்ச் சொல் மறைக்கப்பட்டதால்; தமிழன் அதற்குரிய பொருளை ஆராயவோ, அதற்குரிய வரலாற்றை ஆராயவோ விரும்பவில்லை. விசுவாமித்திரர் என்ற ஆபாசப் பொருள் பொதிந்த வார்த்தையினால் எவ்வளவு பெரிய இழப்பு! இவ்வாறுதான், சமசுக்கிருதம் தமிழை அழித்தது, அழித்துக் கொண்டிருக்கிறது.

# தமிழர் மதமே இந்துமதம்.

## இந்துமதத்தின் ஆறு சமயங்கள். இந்துமதத்தின் ஆறு பதினெட்டுக்கள்.

1) இந்துமதச் சமயம் ஒவ்வொன்றும் பதினெண்சித்தர் வடிவாக வாழ்வாக அருளூறு இலக்கியங்கள் பதினெட்டினைப் பெற்றிருக்கிறது.

2) இந்துமத சமயங்களின் மொத்த இலக்கியங்களான நூற்றெட்டும் அழகிய பழகுதமிழ் சொற்களால் ஆனவையே; எல்லாச் சொற்களும் பொருளாழமும், எளிமையும், இனிமையும் உடையவையே; எல்லாச் சொற்களும் இறையாற்றல் ஊற்றெடுப்பவையே.

3) இந்துமதச் சமயங்கள் ஆறுக்கும் உரிய இலக்கியங்களின் பெயர்கள் அழகிய பைந்தமிழ்ச் சொற்களால் பொருள் விளக்கம் தருகின்றார்.

இந்து = விந்து, உயிரணு, உயிரின் கரு, உயிரின் ஆரம்பமும் முடிவும், அழகு, அன்பு, அமைதி, அருள், ஆதரவு, இல்லறம், இன்பம், இனிமை, இளமை, இரக்கம், இறைமை, ஈகை, உறவு, உரிமை, உய்வு, உயர்வு, உழைப்பு, ஊக்கம், எல்லா (கதிரவன், சூரியன், ஒளி), எளிமை, ஏற்றம், ஒலி, ஒளி, ஒற்றுமை, ஒருமைப்பாடு, ஓதம், ஓதி உணர்தல், பிறப்பிறப்பற்ற பெருநிலை, தவம், ஞானம், வலிமை, தூய்மை, மெய்மை, துய்ப்பு, பத்தி, சத்தி, சித்தி, முத்தி, நிலைபேறு.

4) பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூறார் கி.மு.100 முதல் கி.பி.150 வரை செயல்பட்டார். இவர் தமது குருபாரம்பரியத்தில் "... இந்துமதம் 43,71,000 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி முறையாகவும், நிறையாகவும் வாழ்ந்திருந்தும் கூடப் பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியரால் இரண்டாயிரமாண்டு காலக் குறுகிய எல்லைக்குள் மிகப்பெரிய சிதைவு, சீரழிவு, திருத்தம், மாற்றம், பயனற்ற பழக்க வழக்கம், அறியாமைமிகு சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகள், கண்மூடித்தனமான கற்பனைக் கதைகள், குழப்பவாதப் புராணப் புளுகுகள் புகுத்தப்பட்டு விட்டன.

5) எம் காலத்தில் 'இந்து' என்ற அமுத வண்டமிழ்ச் சொல்லுக்கு நூற்றுக்கு மேற்பட்ட அழகிய பொருள் விளக்கச் சொற்கள் அமைந்து விட்டன. முன்பு ஆதிசிவனாரே இந்தப் பதினெண்சித்தர்களின் **'சித்தர்நெறி'** யெனும் **'சீவநெறி'**யான (சீவநெறி -> சிவநெறி -> சைவநெறி -> சைவசமயம்) **'இந்துமதத்'**திற்கு நாற்பத்தெட்டுத் தீந்தமிழ்ச் சொற்களால் பொருள் வழங்கியுள்ளார். ஆனால், இன்றுள்ள நந்தமிழர்களே இந்துமதத்தைப் பிருமணருடையது; சமசுக்கிருத மொழிக்குரியது என்று கருதியும் கூறியும் திரிகிறார்கள். சிவன்களும், மாயோன்களும், பிறமண்களும், ... தொடர்ந்து அமுதத் தமிழில் அருளாட்சி நிகழ்த்தி வருவதை அறிய முடியாதவர்களாகவும், நம்பத் தயாராக இல்லாதவர்களாகவும், ... இருக்கிறார்கள். இவற்றை மாற்றிடவே 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' தோற்றுவிக்கப்பட்டது. ஆனால், 'இந்து' என்ற சொல்லையே தமிழர் ஏற்கத் தயங்குகின்றனர். எனவேதான், 'தமிழின விடுதலை இயக்கம்', 'தமிழ்மொழி விடுதலை இயக்கம்', 'தமிழர் விடுதலை இயக்கம்' ... முதலிய நாற்பத்தெட்டு நிறுவன நிர்வாகங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன...." என்று எழுதுகிறார்.

6) இவற்றை யெல்லாம் பல்வேறு கோணங்களில் தெளிவாக எடுத்தெடுத்து விளக்கிக் கூறி எழுதுகிறார். தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்கள் [கி.பி.785-கி.பி.1040]. அப்படியவர் தமது 'குருபாரம்பரியம்', 'இலக்கிய பாரம்பரியம்', 'அரச பாரம்பரியம்' என்ற முப்பெரும் தொடர் வரலாற்று நூல்களால்தான் அவர் உருவாக்கிய பிற்காலச் சோழப் பேரரசு கி.பி.785 முதல் கி.பி.1279 முடிய 'தமிழினப் பேரரசாக', 'தமிழ்மொழிப் பேரரசாக', 'தமிழரின் இந்துமதப் பேரரசாக' விளங்கிற்று.

7) இவற்றை எண்ணிப் பார்த்தாவது; இன்றைய தமிழர்கள் 'தங்களுடைய மதம்தான் இந்துமதம்'

என்ற பேருண்மையினை உணர்ந்து 'தமிழின மொழி மத விடுதலை இயக்கம்' வளரப் பாடுபடல் வேண்டும்.

8) தமிழர்கள் 'தன்மானப் பிடிப்பு', 'இனமானப் பிடிப்பு', 'இன உணர்வுப் பிடிப்பு', 'இன ஒற்றுமை', 'இன ஒருமைப்பாடு' ... முதலிய பண்புகளில் நலிந்து அடிமைப்பட்டுள்ள நிலைகளை மாற்றும் "பகுத்தறிவுப் புரட்சிதான் (Rationalistic Revolution) தமிழின விடுதலை இயக்கப் பணி".

9) தமிழர்கள் 'தாய்மொழிப் பற்று', 'தமிழ்மொழி உணர்வு', 'தமிழிலக்கிய ஆர்வம்', 'தமிழ்மொழியின் உரிமை வாழ்வு', 'தமிழ்மொழியின் அருமை பெருமை' ... முதலியவைகளை மறந்தும் துறந்தும் வாழுகிறார்கள். இவர்களின் மறதியையும், துறவையும் மாற்றும் 'இலக்கியப் புரட்சி அல்லது கருத்துப் புரட்சி'தான் (Literary Revolution or the Idealogical Revolution) 'தமிழ்மொழி விடுதலை இயக்கப் பணி'.

***நகல் நல்குபவர்: அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், குருவழி வாரிசு, குருவின் பதிலி, சித்தரடியார் சீ.மணி, 16/11/1988.***

"... இத்திருநாட்டு மக்களில் உயர்ந்த செல்வர்களும், செல்வாக்குடைய பெரியவர்களும், புகழ் படைத்தவர்களும், அரசர்களும், தளபதிகளும், அமைச்சர்களும், உடல்வலிமை படைத்தவர்களும், உயர்ந்த சாதிக்காரர்களும் ... ஒருமுறை சித்தர் நெறியின் உயிர்நாடியான மறுபிறப்புத் தத்துவத்தை நினைத்துப் பார்த்தல் வேண்டும். அப்போதுதான், இவர்களெல்லாம், மறுபிறப்பில் இதே நாட்டில் ஏழைகளாய், அனாதைகளாய், அடிமைகளாய், எந்த நிலையுமில்லாத நாடோடிகளாய், எந்தப் பதவியுமில்லாத எளிய குடிகளாய், நோயாளிகளாய் பிறக்க நேரிட்டால் என்னவாகுமென்று ஆழ்ந்து சிந்திப்பார்கள். அப்படிச் சிந்திக்க நேரிடும் போதுதான் சாதிவெறி, ஏற்றத் தாழ்வு, அதிகாரம், ஆணவம், உடல் திமிர், உணர்வு வெறி, ... முதலியவைகளை யெல்லாம் அழிக்க வழிகள் பிறக்கும்..."

**- 11வது பதினெண்சித்தர் பீடாதிபதியின் குருபாரம்பரியம்**

# இந்துமதத்தின் ஆறு பதினெட்டுக்கள்

I.

1. கருவாக்கு 2. கருவாக்கியம் 3. கருவாசகம்
4. குருவாக்கு 5. குருவாக்கியம் 6 குருவாசகம்
7. தருவாக்கு 8. தருவாக்கியம் 9. தருவாசகம்
10. திருவாக்கு 11. திருவாக்கியம் 12. திருவாசகம்
13. அருள்வாக்கு 14. அருள்வாக்கியம் 15. அருள்வாசகம்
16. மருள்வாக்கு 17. மருள்வாக்கியம் 18. மருள்வாசகம்

II.

1. மந்தரம் 2. மந்திரம் 3. மந்திறம் 4. மாந்தரம் 5. மாந்தரீகம்
6. தந்தரம் 7. தந்திரம் 8. தந்திறம் 9. தாந்தரம் 10. தாந்தரீகம்
11. எந்தரம் 12. எந்திரம் 13. எந்திறம்
14 ஏந்தரம் 15. ஏந்தரீகம்
16. தவம் 17. பூசை 18. ஞானம்

III.

1. அத்தரம் 2. அத்திரம் 3. அத்திறம்
4. சாத்தரம் 5. சாத்திரம் 6. சாத்திறம்
7. சூத்தரம் 8. சூத்திரம் 9. சூத்திறம்
10. தோத்தரம் 11. தோத்திரம் 12. தோத்திறம்
13. நேத்தரம் 14. நேத்திரம் 15. நேத்திறம்
16. வேத்தரம் 17. வேத்திரம், 18. வேத்திறம்

IV.

1. மறை 2. மறையாந்தம் 3. முறை 4. முறையாந்தம்
5. நெறி 6. நெறியாந்தம் 7. வேதம் 8. வேதாந்தம்
9. நான்மறை 10. நான்மறையாந்தம் 11. நான்முறை 12. நான்முறையாந்தம்

13. நானெறி 14. நான்நெறியாந்தம் 15. நான்வேதம் 16. நான்வேதாந்தம்
(17, 18 நான் படித்த ஏட்டில் கிழிந்தழிந்திருந்தன.)

V.

1. நாதம், 2. நாதாந்தம், 3. நவநாதம் 4. நவநாதாந்தம்
5. சித்தம் 6. சித்தாந்தம் 7. பதினெண்சித்தம் 8. பதினெண்சித்தாந்தம்
9. போதம் 10. போதாந்தம் 11. முப்பத்தாறு போதம் 12. முப்பத்தாறு போதாந்தம்
13. ஓதம் 14. ஓதாந்தம் 15. தொண்ணூற்றாறு ஓதம் 16. தொண்ணூற்றாறு ஓதாந்தம்
(17,18 - நான் படித்த ஏட்டில் கிழிந்தழிந்திருந்தன)

VI.

1. நேமம் 2. இணைநேமம் 3. துணைநேமம் 4. நியமம், 5. இணை நியமம், 6. துணை நியமம்
7. நிடதம், 8. இணை நிடதம், 9. துணை நிடதம்
10. நிட்டை 11. இணை நிட்டை 12 துணை நிட்டை
13. நீதி 14 இணை நீதி 15. துணை நீதி (16,17,18 - நான் படித்த ஏட்டில் நைந்து கிழிந்தழிந்திருந்தன)

**--காக்கையர் ம. பழனிச்சாமிப் பிள்ளை**

**இதன் மூலம்: சித்தரடியான் சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.**

### 'மெய்யான இந்துமதத்தின் பதினெட்டுக் கட்டளை'

# ஆறு சமயங்களும் பன்னிரண்டு இராசிநிலைகளும்.

ஆறு சமயங்களுக்கும் பயன்படக் கூடிய பொதுவான இராசிநிலைகள் பன்னிரண்டு என்று பன்னிரண்டு வகையான அருளூறு பூசாமொழி இலக்கியங்கள் பதினெண்சித்தர்களால் படைக்கப் பட்டிருக்கின்றன. இவைதான் இந்த ஆறு சமயங்களையும் முறையாகவும், நிறையாகவும், முழுமையாகவும் செயலாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதாவது, பொதுவாகப் பிறப்பியல் [சாதகம் = Horoscope] எனும் மானுட வாழ்வியல் கணிப்பு விஞ்ஞானத்தைக் கண்டுபிடித்த பதினெண்சித்தர்கள் இருபத்தேழு விண்மீன்களும், ஒன்பது கோள்களும், பன்னிரண்டு இராசிகளின் நிலைகளுக்குள் அடங்கித்தான் செயல்படுகின்றன என்ற பேருண்மைகளைக் கண்டறிந்தார்கள். இந்தப் பன்னிரண்டு அருவநிலைகளையும் இம் மண்ணுலகுக்குத் தொடர்பான வானத்தில் மிகத் தெளிவாகத் தெரிகின்ற இருபத்தேழு விண்மீன்களில் இரண்டரை மீன்களுக்கு ஒரு கட்டம் என்ற வீதத்தில் பன்னிரண்டு கட்டங்களை உருவாக்கினுர்கள். இந்தப் பன்னிரண்டு கட்டத்திற்குள்தான் ஒன்பது கோள்களின் இயக்கங்களை ஒவ்வொருவரும் பிறந்த நேரத்திற்கேற்பக் கணித்துக் குறித்தார்கள். அதன்மூலம் தேவைப்படும் போதெல்லாம் மேற்படிக் கோள்களின் இயக்க நிலைகளையும் மற்ற நிலைகளையும், பழைய புதிய இருப்பிடங்களையும் கணித்து அதன்மூலம் வாழ்வியல் பயன்களைக் கண்டுபிடிக்கக் கூடிய பிறப்பியல், சாத்திர, சாத்திற, சாத்தரக் கலைகளை உருவாக்கினுர்கள். இருந்த போதிலும், இந்தக் கலை சோதியாக; அதாவது, ஒளிவடிவமாக இருக்கக் கூடிய இருபத்தேழு விண்மீன்களால் உருவான இராசிகளின் பன்னிரண்டு

கட்டங்களால்தான் வாழுகிறது, வளருகிறது, வளம் பெறுகிறது, பயன்பெறுகிறது என்பதால்; விண்மீன்களின் சோதியை நினைவிற் கொண்டு மனித வாழ்வியலைக் கணிக்கக் கூடிய கலைகள் பிறந்ததால் இவற்றிற்குச் சோதிடக் கலைகள் என்று பெயர் வைத்தார்கள்.

சோதி + இடம் ஞ> சோதிடம் ஞ> ஒளியை இருப்பிடமாக அல்லது ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கலை. அதாவது, சோதிடம் என்பது ஒளியை உடைய விண்மீனை ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கலை என்று பெயர்.

| | | |
|---|---|---|
| 1) | கொம்புள்ள ஆடு | : மேடம் |
| 2) | காளை மாடு | : இடபம் |
| 3) | இரட்டைக் குழந்தைகள் | : மிதுனம் |
| 4) | நண்டு | : கடகம் |
| 5) | பெண் சிங்கம் | : சிம்மம் |
| 6) | கன்னிப் பெண் | : கன்னி |
| 7) | தராசு | : துலாம் |
| 8) | தேள் | : விருச்சிகம் |
| 9) | கலப்பை | : தனுசு |
| 10) | முதலை | : மகரம் |
| 11) | நிறை கலசம் | : கும்பம் |
| 12) | மீன் | : மீனம் |

மேற்கூறிய பன்னிரண்டு இராசிகளும் கீழ்க்காணும் பன்னிரண்டு அருளூறு பூசாமொழி இலக்கியங்களால் விளக்கப்படுகின்றன.

1) சுருதி, 2) இணை சுருதி, 3) துணை சுருதி,

4) ஆரணம், 5) இணை ஆரணம், 6) துணை ஆரணம்,

7) ஆகமம், 8) இணை ஆகமம், 9) துணை ஆகமம்,

10) மீமாம்சை, 11) இணை மீமாம்சை, 12) துணை மீமாம்சை

இந்தச் சமயப் பேருண்மைகள் எல்லாச் சமய ஞானங்களுக்கும் திறவு கோலாக ஆதிசிவனின் குருபாரம்பரியம், குருவாசகம், குருவாக்கு ஆகிய மூன்றிலும் குறிப்பிடப் படுகிறது.

“இந்தப் பன்னிரண்டில் எது எந்த இராசியைக் குறிக்கும் என்பதுதான் இரகசியம். அந்த இரகசியம் தெரிந்தவர்கள்தான் மிகப்பெரிய அரிய உயரிய சீரிய நேரிய சித்திகள் அனைத்தையும் பெறக் கூடியவர்கள். அதாவது, பதினெண்சித்தர்களும், பதினெண்சித்தர் பீடாதிபதிகளும், அவர்களுடைய நேரடி வாரிசுகளும், அவர்களின் முழுமையான நம்பிக்கைக்குரிய மெய்யான குருவழி வாரிசுகளும்தான் மேற்படிப் பேருண்மைகளை உணர முடியும், உணர்த்த முடியும், செயல்படுத்த முடியும். மற்றவர்கள் எப்பாடுபட்டு உணர்ந்தாலும் அது, மரப்பாவையை எவ்வளவுதான் சிங்காரித்தாலும் இல்லற வாழ்விற்குத் துணையாக்கிக் கொள்ள முடியாது என்பதுபோல்தான்.”

**-ஆதிசிவனின் குருவாக்கியம்.**

“சுருதி ஆரண ஆகம மீமாம்சை எனும் நான்கும் இணை துணை எனும் பகுப்புக்களோடு சேர்த்து எண்ணப்படக் கிடைக்கும் பன்னிரண்டு நூல்களும்தான் பன்னிரு இராசிகளாகும். இவைதான், இரண்டரை, இரண்டரை விண்மீன்களைக் கொண்டு உருவாக்கப்படும் பன்னிரண்டு வீடுகளுக்குள் ஒன்பது கோள்கள் அடக்கப்பட்டு மானுட வாழ்வியலைக் கணிக்கும் உயிர்நாடியாகும். எனவே, இப்பன்னிரண்டு இராசிகள் பற்றிய பேருண்மைகளைப் பாரம்பரியமோ, உரிய பக்குவமோ இல்லாதவர்கள் தெரிந்து கொண்டால் நாள், கோள், மீன் முதலியவைகளின் இயக்கங்கள் ஒவ்வொரு தனிமனித வாழ்வியலிலும் இயற்கையாக அமைவது திருத்தப்பட்டும், மாற்றப்பட்டும், தடுக்கப்பட்டும், கெடுக்கப்பட்டும், விடுவிக்கப்பட்டும் பெரும் சீர்கேடுகளும், முறைகேடுகளும் மானுட வாழ்வியலில் ஏற்பட்டு விடும். எனவேதான், எப்படி இராகுகாலத்தை மட்டும் மானுடர்க்கு அறிவித்துக் கேது காலத்தைப் பற்றிய அனைத்துப் பேருண்மைகளும் மறைக்கப்பட்டிருக்கின்றனவோ, அப்படியேதான், பன்னிரு இராசிகளைப் பற்றிய பேருண்மைகளும் மறைக்கப்பட்டாக வேண்டும். எனவேதான், இந்தச் சுருதி ஆரணம் ஆகமம் மீமாம்சை எனும் நான்கும் மறைக்கப்பட்டாக வேண்டும். மறைக்கப்பட்டாக வேண்டும், மறைக்கப்பட்டாக வேண்டும். எனவேதான், இந்தச் சுருதி, ஆரணம், ஆகமம், மீமாம்சை எனும்

நான்கையும் மறையாகக் காக்க வேண்டிக் குருவாணை வழங்கப்படுகிறது ....”

**-ஆதிசிவனுர் குருவாக்கு**

“பன்னிரண்டு இராசிகளையும் முறையாகவும் நிறைவாகவும் இயக்கத் தெரிந்தவர்களே பதினெண்சித்தர் பீடாதிபதிகள். இவர்கள் இப்பன்னிரு இராசிகளால் ஆறு சமயங்களுக்கும் உரிய பதினெட்டு அங்கங்களையும் இயக்கி நிகழ்த்தும் அருளாட்சிதான் இந்துமதம் எனும் அண்டபேரண்டமாளும் சீவநெறி. இச் சீவநெறியின் உயிராகவும், மெய்யாகவும், உயிர்மெய்யாகவும் இருப்பதுதான் அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அமுத முத்தமிழ் மொழி. இதுவே இம்மண்ணுலகுக்கு மூத்தமொழி. இம்மொழியே பன்னிரு இராசிகளையும் இயக்கவல்லது. இம்மொழியை முழுமையாக உணர்ந்தவர்களும், உணர்த்த வல்லவர்களும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளே ...”

**-ஆதிசிவனுர் குருவாசகம்**

குறிப்பு:- ஆதிசிவனுர் காலம் கி.மு. 43,71,101. இந்த ஆதிசிவனுரின் வாக்கு, வாக்கியம், வாசகம் என்ற மூன்றும்தான் ஆறு சமயங்களைப் பற்றியும் பன்னிரு இராசிகளைப் பற்றியும் கூறப்படுவன.

சிறப்புக் குறிப்பு:- ஆறு சமயங்கள் ஏன்? என்ற தத்துவ விசாரணையில் ஈடுபடும் போதுதான் இந்துமதத்தின் அருமை பெருமைகளும் பயன்களும் தெரியவரும். அத்துடன் ஏராளமான நூல்கள் வரலாற்றுச் செய்திகள், சமயச் செய்திகள், ... ஆகியனவற்றையும் தெரிந்து கொள்ளலாம்.

***நகல் நல்குபவர்: அருள்மிகு தலைமைப்பீடத் திருவோலை நாயகம், கபாலீசுவரி சன்னிதானம், குருவழி வாரிசு, குருவின் பதிலி, சித்தரடியார் சீ.மணி, 14/12/1988***

# இராசி பயன் (இராசி பலன்)

(1) அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்கள் தங்களுடைய அருளுலக ஆட்சிமொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் அருளியுள்ள இந்துவேதத்தின் முதல்வேதமும், அடிப்படை வேதமும், மற்ற வேதங்களின் தாய்வேதமுமான இருக்கு வேதத்தில்தான் 1. ‘இருபத்தேழு விண்மீன்கள்’, 2. ‘இராகு, கேது எனும் இரு நிழல் கோள்கள்’, 3. ‘ஏழு நாள்கள்’, 4. ‘ஒன்பது கோள்கள்’, 5. ‘இந்நான்கின் இயக்க நிலைகளால் தோன்றும் சாயாநிலையுறு மாய வடிவப் பன்னிரு இராசிகள்’ எனும் ஐந்தையும் பற்றிய செய்திகளும்; இவற்றுல், இம்மண்ணுலகில் உள்ள 1. நிலம், 2. நீர், 3. நெருப்பு, 4. காற்று, 5. வெற்றிடம், [**வெற்றிடம் என்ற சொல்லுக்குப் பாழிடம் என்ற பாட வேறுபாடு பல ஏடுகளில் உள்ளது**] எனும் ஐந்தும்; 1. கல், 2. மண், 3. மணல், 4. பயிரினம், 5. உயிரினம் எனும் ஐந்தும் இயக்கப் படுகின்ற பேருண்மைகளும் விளக்கப் பட்டுள்ளன.

இவை, 1. ’பஞ்சாங்கம்’, 2. ’ஐந்தரம்’, 3. ’ஐந்திரம்’, 4. ’ஐந்திறம்’ எனும் நான்கு வகைப்பட்ட இந்துமதச் 1. ’சாத்தரங்களாக’, 2. ’சாத்திரங்களாக’, 3. ’சாத்திறங்களாக’ ஆக்கப்பட்டுள்ளன. இந்த இந்துமத நூல்கள் பன்னிரண்டும்தான் இந்துவேதத்தால், இந்துமதத்தால் ... மானுடருக்கு என்ன பயன்? என்ன நன்மை? என்ன ஈட்டம்? ... என்ற விஞக்களுக்கு விடையளிக்கும் ‘இந்துமதச் சடங்கியல் நூல்கள் பன்னிரண்டு’ என்றும்; ‘இந்துமத நடைமுறை நூல்கள் பன்னிரண்டு’ என்றும்; ‘இந்துமத வாழ்வியல் நூல்கள் பன்னிரண்டு’ என்றும்; ‘இந்துமத மரபியல் நூல்கள் பன்னிரண்டு’ என்றும்; ‘இந்துமத ஒழுகலாற்று நூல்கள் பன்னிரண்டு’ என்றும்; ... பல பெயர்களில் பாராட்டப் படுகின்றன. ஏனென்ருல், இந்தப் பன்னிரண்டு நூல்களால்தான் **‘ஓர் இந்துவின் வாழ்க்கை’** எப்படி எப்படியெல்லாம் சிறப்புக்குரியதாக, நன்மைக்குரியதாக, முன்னெச்சரிக்கைக்கு உரியதாக

... நன்கு திட்டமிடப்பட்டு இருக்கிறது என்ற பேருண்மை விளக்கமாகிறது.

(2) **இருக்கு வேதத்தில்** கூறப்பட்டுள்ள 1. 'விண்மீன்', 2. 'கோள்', 3. 'நாள்', 4. 'நிழல்கோள்', 5. 'இராசி' எனும் ஐந்தையும் பற்றிய நுட்பமான செய்திகள் பல அதர்வான வேதத்தில்தான் விளக்கப் பட்டுள்ளன. ஆனால், இந்த ஐந்தையும் பயன்படுத்தித்தான் 'அசுரவேதமும்', 'யாமவேதமும்' ['சாமவேதம்' என்ற பாடவேறுபாடு 'யாமவேதம்' என்ற சொல்லுக்குப் பல ஏடுகளில் காணப்படுகிறது] எனும் இரு வேதங்களையும் செயல்படுத்த முடியும், இப்படியாக, நான்கு வேதங்களுக்கும் அடிப்படையாக இருக்கும் 'விண்மீன்', 'நாள்', 'கோள்', 'நிழல்கோள்', 'இராசி' எனும் ஐந்தும் இம்மண்ணுலகில் அனைத்துவகைப்பட்ட பொருள்கள், பயிரினங்கள், உயிரினங்கள், ... முதலியவைகளின் எல்லாநிலைகளையும், இயக்கங்களையும், பாதிப்புக்களையும், ... ஆயுளையும் ('வாழ்நாள் காலம்' என்ற பாடவேறுபாடு உண்டு) முன்கூட்டியே கணித்திட உதவுகின்றன. எனவேதான், இந்த ஐந்து 'ஐங்கரம்', 'ஐஞ்சிரம்', 'ஐம்பூதப் புலன்' ... என்று பல சிறப்புப் பெயர்களால் குறிக்கப்பட்டுப் பாராட்டப் படுகின்றன.

(3) இந்த இருபத்தேழு விண்மீன்களின் ஒளிக்கற்றைகள்தான் ஒன்பது கோள்களின் ஒளிஅலைகள், ஏழுநாள்களின் ஒளிஅலைகள், நிழல்கோள்களின் ஒளிஅலைகள் எனும் மூன்று வகைப்பட்ட ஒளிஅலைகளை மண்ணுலகுக்குத் தள்ளிக் கொண்டு வந்து செயல்படச் செய்கின்றன. இப்படி மூன்று வகைப்பட்ட ஒளி அலைகளை மண்ணுலகுக்குக் கொண்டு வந்து இம்மண்ணுலகில் உள்ள பொருள்கள், பயிரினங்கள், உயிரினங்கள், ... முதலியவற்றின் இயக்கங்களையும், வளர்ச்சிகளையும், தளர்ச்சிகளையும், வீழ்ச்சிகளையும், தாழ்ச்சிகளையும், அயர்ச்சிகளையும், சிதைவுகளையும், சீரழிவுகளையும், தோற்றமாற்றங்களையும், ஏற்ற இறக்கங்களையும், அவலக் கேவலங்களையும், இன்ப துன்பங்களையும், வலிவு மெலிவுகளையும், பொலிவு நலிவுகளையும் கணக்கிடும் வரைகோட்டுச் சக்கரம்தான் பன்னிரண்டு கட்டங்களை உடைய இராசிக்கட்டம், யாம (சாம) வேதத்தின் சின்னமாக, அடையாளமாக, குறியீடாக, முத்திரையாக இந்துவேதத்தில் குறிக்கப் படுகிறது. அதாவது, இந்துவேதம் என்றாலேயே இருக்கு வேதத்தைத்தான் குறிக்கும் என்பதால், யாமவேதத்தின் சின்னம் பன்னிரண்டு கட்டங்களையும் உடைய இராசிக் கட்ட வரைக்கோட்டுச் சக்கரம் ஆகும்.

(4) இந்த இராசிக் கட்டத்திற்குரிய பன்னிரண்டு கட்டங்களும், மேல்பக்கத்தில் உள்ள இரண்டாவது கட்டத்தில் இருந்து

1. கொம்பாட்டுத் தலை (கொம்புள்ள ஆட்டுத்தலை),
2. காளைமாட்டுத் தலை,
3. இரண்டு சிறுவர்கள் அருகருகே அமர்ந்திருக்கும் முழுமையான வடிவத்தோற்றம் அல்லது ஆணும்பெண்ணும் அருகருகே உள்ள தோற்றம்,
4. நண்டின் வடிவம்,
5. பெண்சிங்கத் தலையின் வடிவம்,
6. இரண்டு கன்னிப்பெண்கள் அருகருகே அமர்ந்திருக்கும் வடிவத் தோற்றம்,
7. துலாக்கோல் (தூக்கி நிறுத்தும் கோல் = இரண்டு தட்டுக்கள் உடைய தராசு வடிவம்),
8. நாட்டுவாக்காளி (பெரிய கருந்தேள் = விருச்சிகம் = சிறிய தேள் அல்லது கரிய தேள், மலைத்தேள், மரத்தேள் வடிவம்),
9. அம்பு பூட்டிய வில்லின் வடிவம்,
10. கொம்புடைய குதிரையின் முகத்தையும், மீனின் உடலையும் உடைய கடல் பேய் என்னும் விலங்கின் வடிவம்,
11. பூசைக்குச் சிங்காரிக்கப்படும் கிரகம், அல்லது கலசம் போன்ற வடிவம்,
12. மீனம் = தாவிக்குதிக்கும் மீனின் வடிவம்.

***[கட்டுரை முழுமையாகக் கிடைக்கவில்லை]***

**இதன் மூலம்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது. யாருடைய கையெழுத்து என்று தெரியவில்லை. கட்டுரையும் முழுமையாகக் கிடைக்கவில்லை.**

